


ப்யூனஸ் அயர்ஸ் வெடிகுண்டுத் தாக்குதல் ஹிஸ்புல்லாவைப் பொறுத்தவரை ஒரு வெற்றிகரமான முயற்சிதான் என்றாலும், மூசாவி படுகொலைக்கு அந்த 'எளிய' பதிலடி போதுமானது என்று அவர்களுக்குத் தோன்றவில்லை. தவிரவும், எப்படியும் இஸ்ரேல் தங்களை மோப்பம் பிடித்து, உரிய ஆதாரங்களுடன் ஆக்ரோஷமாக வரும்; அப்போது யுத்த களத்தில் ஒரு பின்னிணைப்பு தீபாவளி கொண்டாடலாம் என்று நினைத்துக்கொண்டிருந்தார்கள்.

ஆனால், இமத் ஃபயாஸ் மக்னியா, தாக்குதலுக்கு முன் செய்துவைத்திருந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகவும் பக்காவாக இருந்தபடியால், உண்மையிலேயே அந்தத் தாக்குதலை ஹிஸ்புல்லாதான் செய்தது என்பதற்கான ஒரு சிறு ஆதாரம் கூட அகப்படவில்லை. யோசித்துப் பாருங்கள். மூசாவி படுகொலைக்குப் பதிலடியாக நிகழ்த்தப்பட்ட தாக்குதல் என்று பிட் நோட்டீஸ் அடித்துப் போட்டுவிட்டு வந்திருக்கிறார்கள். மூசாவி படுகொலைக்கு வேறு யார் பதிலடி தருவார்கள்? ஒசாமா பின்லேடனா? எல்.டி.டி.ஈ. பிரபாகரனா? ஷேக் முஹம்மது யாசினா? ஹிஸ்புல்லா தலைவரின் மரணம், ஹிஸ்புல்லாவைத்தானே முதலில் பாதிக்கும்? இஸ்ரேலுக்கு இது தெரியாதா என்றால், கண்டிப்பாகத் தெரியும். ஆனால் ஆதாரமில்லை. அந்தக் காலகட்டத்தில் லெபனான் அல்லது சிரியா அல்லது பாலஸ்தீனிலிருந்து ப்யூனஸ் அயர்ஸுக்கு ஒரு கட்டெறும்பு, விமானம் ஏறிப் போனதாகக்கூட ஒரு ரெக்கார்டு இல்லை! ப்யூனஸ் அயர்ஸிலேயே இருக்கும் ஹிஸ்புல்லா ஆதரவாளர்கள் ஏதாவது செய்திருக்கக் கூடும் என்று நிரூபிப்பதற்குக் கூட, ஒரு தடயமும் சிக்கவில்லை. சனியன் ஒழியட்டும் என்று கேஸை மூடுவதற்காக, அங்கே இருந்த சில ஈரானிய தூதரக அதிகாரிகளைச் சந்தேகப் பட்டியலில் சேர்த்து, அவர்களை மட்டும் நாடு கடத்தச் சொல்லிவிட்டு ஊர் போய்ச் சேர்ந்துவிட்டார்கள்.

இதுதான் ஹிஸ்புல்லாவுக்குச் சப்பென்று ஆகிவிட்டது. எதிரியை வசமாகச் சீண்டியும் ஒன்றும் பிரயோஜனமில்லையே என்று கவலைப்பட்டிருப்பார்கள் போலிருக்கிறது. இடைப்பட்ட காலத்தில் வேறு பல காரியங்களில் அவர்கள் ஈடுபட்டிருந்தாலும், மனத்தின் அடி ஆழத்தில் இந்த ப்யூனஸ் அயர்ஸ் தாக்குதலின் 'போதாமை' உறுத்திக்கொண்டே இருந்தபடியால், இரண்டு வருடங்கள் கழித்து மீண்டும் ஒரு தாக்குதலை அங்கேயே நிகழ்த்த முடிவு செய்தது ஹிஸ்புல்லா. ஜூலை 18, 1994 அன்று அந்த நகரத்தில் இருந்த ஒரு யூத கலாசார மையத்தில் சக்தி மிக்க குண்டு ஒன்றை வைத்துவிட்டு, நகம் கடித்துக்கொண்டு காத்திருந்தார்கள். இம்முறை அது

நடந்தது. எதிர்பார்த்த ரிசல்ட். எதிரிகளை அதிர்ச்சியின் எல்லைக்கே விரட்டிய ரிசல்ட். எண்பதுக்கும் மேற்பட்ட யூதர்கள் பலி. சுமார் இருநூறு பேர் மிகப்படுகாயம். அள்ளி எடுத்துப்போய் ஆஸ்பத்திரியில் போட்டவர்களே மயக்கமடைந்து விழுகிற அளவுக்குக் குரூரத் தாக்குதல். இஸ்ரேலுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. பாலஸ்தீன் போராளி இயக்கங்களையெல்லாம் கோயில் கட்டிக் கும்பிடலாம் போலிருந்தது. அவர்களிடமெல்லாம் கோபம் இருந்தாலும் இத்தனை பயங்கரத் தாக்குதல்களைத் திட்டமிடத் தெரியாதவர்கள்.
தினசரி குண்டு வெடித்தாலும் அத்தனையும் வெங்காய வெடிகள். சமாளிப்பதோ, திருப்பியடிப்பதோ ஒரு பெரிய காரியமே இல்லை. ஆனால், ஹிஸ்புல்லாவை நெருங்கக்கூட முடியவில்லை. இத்தனைக்கும் எத்தனையோ பல ஆண்டுகளாக லெபனானிலேயே இஸ்ரேல் படைகள் கூடாரமடித்துக் குடித்தனம் நடத்திக்கொண்டுதான் இருந்தன. தெற்கு லெபனான் முழுவதையும் இஸ்ரேல் கைப்பற்றிவிட்டிருந்ததாகத்தான் மேப்புகள் தெரிவித்தன. பல மேற்கத்திய நாடுகளும் அந்த ஆக்கிரமிப்பை அங்கீகரித்தோ, அல்லது கண்டுகொள்ளாமலோ இருக்கப் பழகிவிட்டன. ஆனால், அதே தெற்கு லெபனானிலேயே இருந்து இயங்கிக்கொண்டிருந்த ஹிஸ்புல்லாவை அவர்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை. தினசரி யுத்தம் என்று ஒன்று நடந்துகொண்டுதான் இருந்தது. இரண்டு பக்கங்களிலும் சேதாரங்களுக்கும் குறைவில்லை. இஸ்ரேலாவது யுத்த இலக்கணப்படி வியூகமெல்லாம் வகுத்துப் போரிட்டது. ஹிஸ்புல்லாவுக்கு ஒரு மண்ணாங்கட்டி இலக்கணமும் கிடையாது. பொழுது விடிந்து பல் தேய்த்து, காபி சாப்பிட்டு ஆனதும் தோளில் ஒரு துப்பாக்கியைத் தூக்கி மாட்டிக்கொண்டு கிளம்புவார்கள். குறைந்தது ஒன்று அல்லது இரண்டு இஸ்ரேலிய ஜவான்களையாவது சுட்டுத் தள்ளிவிட்டு, அல்லது தூக்கிப் போட்டுக்கொண்டு வந்துவிட்டுத்தான் அன்றைய பணிகளையே ஆரம்பிப்பார்கள்.

வாரத்துக்கு ஒரு இஸ்ரேலிய கிராமத்தைச் சூறையாடுவது, மாதத்துக்கு ஒரு இஸ்ரேலிய ராணுவ முகாமை துவம்சம் செய்வது, மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது ஒரு இஸ்ரேலிய ராணுவ அதிகாரியைக் கடத்திப்போய் வைத்துக்கொண்டு தண்ணி காட்டுவது. இதுதான் ஹிஸ்புல்லாவின் இஸ்ரேலுக்கான 'யுத்த திட்டம்.' 1999_ம் ஆண்டின் இறுதிவரை இஸ்ரேல் தாக்குதல், ஹிஸ்புல்லா பதில் தாக்குதல்; ஹிஸ்புல்லா தாக்குதல், இஸ்ரேல் பதில் தாக்குதல் என்று இந்த யுத்தம் ஒரு நாள் விடாமல் நடந்துகொண்டுதான் இருந்தது. ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசுப் பொது விடுமுறை தினங்களில் கூட ஓய்வு கிடையாது. குறிப்பாக, 99_ம் ஆண்டின் இறுதி மூன்று மாதங்களில் இந்த யுத்தம் மிகத் தீவிரமடைந்தது. அதுவரை இஸ்ரேலிய எல்லைப்பகுதிகளில் மட்டுமே தாக்குதல் நடத்திக்கொண்டிருந்த ஹிஸ்புல்லா, அப்போது டெல் அவிவ் வரை முன்னேறி வந்து எதிர்பாராத தருணங்களில் குண்டுவெடிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

எப்படி, எங்கிருந்து ஊடுருவுகிறார்கள் என்பதே கண்டுபிடிக்க முடியாமல் இருந்தது. காஸா பகுதியில் கோலோச்சிக்கொண்டிருந்த ஹமாஸுக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் தொடர்பும் நெருக்கமும் உண்டு என்பது இஸ்ரேலிய ராணுவத்துக்குத் தெரியும். ஆனால், அந்த நெருக்கத்தின் இறுக்கம் எத்தனை என்பது குறித்த துல்லியமான விவரங்கள் அவர்களிடம் கிடையாது. ஹிஸ்புல்லாவினர், போராளிகளாக அல்லாமல், வர்த்தகர்கள் போலவும் அதிகாரிகள் போலவும் தலையைச் சுற்றி மூக்கைத் தொடும் வழியில் டெல் அவிவுக்கு வந்துவிடுவார்கள். அங்கே அவர்களுக்குத் தேவையான

ஆயுதங்களை, ஹமாஸ் போராளிகள் தயாராக வைத்திருப்பார்கள். ஒரே இரவுதான். அடித்து துவம்சம் பண்ணிவிட்டு பஸ் பிடித்து எல்லை வரை போயே விடுவார்கள். அங்கே காத்திருக்கும் ஹிஸ்புல்லாவின் வாகனங்கள் அவர்களை அப்படியே கொத்திக்கொண்டு ஊருக்குள் ஓடிவிடும்.

ஏரியல் ஷரோன் இஸ்ரேலின் பிரதமரான பிறகுதான், லெபனான் மீதான இஸ்ரேலின் இச்சை கொஞ்சம் தணிந்தது என்று சொல்லவேண்டும். ஷரோனுக்குப் பாலஸ்தீன் போராளிகளை ஒடுக்குவதுதான் முதன்மையான நோக்கம். லெபனானை இப்போதைக்குக் கண்டுகொள்ள வேண்டாம் என்று அவர் நினைத்தார். வீம்புக்கு அங்கே ஒரு ராணுவத்தைக் கொண்டுபோய் நிறுத்திவைத்திருப்பதால்தான் தாங்கள் சீண்டப்படுவதாக ஹிஸ்புல்லாக்கள் உணர்கிறார்கள் என்று கருதிய ஷரோன், ராணுவத்தை வாபஸ் வாங்குவது குறித்து யோசிக்கத் தொடங்கினார். இந்த யோசனை, ராஜதந்திர ரீதியில் உதித்தது மட்டுமல்ல. யதார்த்தமும் இதற்கு நெருக்கமானதாகவே இருந்தது என்பதைச் சொல்லவேண்டும்.

பாலஸ்தீன் போராளிகளின் தாக்குதலால் இஸ்ரேலுக்கு ஏற்பட்டுக்கொண்டிருந்த இழப்பைக் காட்டிலும், தெற்கு லெபனான் யுத்தத்தில் அவர்களுக்கு ஏற்பட்டது அதிகமே. குறிப்பாக, இஸ்ரேல் ராணுவத்தின் ஆயுதச் சாலைகளின்மீது ஹிஸ்புல்லா நிகழ்த்திய தாக்குதல்களால் அவர்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் மிக அதிகம். வெறுமனே அழித்துவிட்டுப் போவது மட்டுமல்ல. ஏகப்பட்ட நவீன ஆயுதங்களை எடுத்துக்கொண்டும் போய்விடுவார்கள். மறுநாள் யுத்தத்தில் இஸ்ரேல் ஆயுதங்களே இஸ்ரேல் படைகளைத் தாக்கும்! அதனால்தான் வேறு வழியே இல்லை, லெபனானிலிருந்து வாபஸ் வாங்கித்தான் தீரவேண்டும் என்று முடிவு செய்தார்கள்.

மே 23, 2000 அன்று ஏரியல் ஷரோன், இஸ்ரேலியப் படைகள் லெபனானிலிருந்து திரும்பும் என்று பகிரங்கமாக அறிவித்தார். பதினெட்டு வருடங்களாக லெபனானில் இருந்த படை அது! தாக்குப் பிடிக்க முடியவில்லை என்று சொல்லாமல் சொல்லிவிட்டு வெளியேறத் தொடங்கியதும், தெற்கு லெபனான் மக்கள் ஆனந்தக் கூத்தாடினார்கள். ஹிஸ்புல்லாவினரைத் தலைக்குமேல் தூக்கிவைத்துக்கொண்டு குதித்தார்கள். இனிப்புகள் பரிமாறப்பட்டன. பட்டாசுகள் வெடிக்கப்பட்டன. ஹிஸ்புல்லாவிலேயே சந்தோஷம் என்கிற உணர்ச்சி முதல் முதலில் வெளிப்பட்ட தருணம் அது!

ஜூன் மாதம் 2000_ம் வருடம், ஐ.நா.வின் பொதுச்செயலாளர் லெபனான் நிலைமையை ஆராய்ந்துவிட்டு, இஸ்ரேல் படைகள் விலகியது உண்மைதான் என்று அறிவித்தார். பின்னாலேயே வால் போல் ஒட்டிக்கொண்டுவந்த ஐ.நா.வின் பாதுகாப்பு கவுன்சில், 'ஆம். நான் வழிமொழிகிறேன்' என்று சர்டிஃபிகேட் கொடுத்தது.

ஆனால் ஹிஸ்புல்லா இதனை முழுக்க ஒப்புக்கொள்ளவில்லை. லெபனான், சிரியா எல்லைப்பகுதியில் உள்ள ஒரு சிறு நிலப்பரப்பு அப்போதும் இஸ்ரேல் வசம்தான் இருந்தது. அது தங்களுக்குச் சொந்தமான இடம் என்று சிரியா அரசாங்கம் சொல்லிக்கொண்டிருந்தாலும், புவியியல் ரீதியிலும், லெபனான் பிரிக்கப்பட்டபோது இழுக்கப்பட்ட எல்லைக்கோட்டு ரீதியிலும் அந்த இடம் லெபனானுக்கே சொந்தமானது என்றும், இன்னும் இஸ்ரேல் முழுக்க காலி பண்ணவில்லை; அதனால் நாங்கள் போரை நிறுத்தப்போவதில்லை என்றும் அறிவித்தது. இந்த அறிவிப்பின் விபரீதத்

தொடர்ச்சிதான் மிகச் சமீபத்திய இஸ்ரேல் _ ஹிஸ்புல்லா யுத்தம்.

ஒரு மாதிரி ஹிஸ்புல்லாவைப் பற்றிய இமேஜ் கிடைத்துவிட்டிருக்கும் அல்லவா? இனி விஸ்தாரமாக அந்த அமைப்பின் உள் கட்டுமானம், மேஸ்திரிகள் எல்லாரையும் எல்லாவற்றையும் குறித்துப் பார்க்க ஆரம்பிக்கலாம்.

ஹிஸ்புல்லாவின் தோற்றத்துக்கும், இன்றைய இருப்புக்கும் செயல்பாடுகளுக்கும் மிக முக்கியமான காரணகர்த்தாக்கள் என்று மூன்று பேரைச் சொல்லவேண்டும். இஸ்ரேலுக்கு எதிராக ஏதாவது செய்யவேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்த லெபனானிய இளைஞர்களை ஒருங்கிணைத்து, ஓர் அமைப்பாக அவர்களை உருக்கொள்ளச் செய்து, போர்ப்பயிற்சி அளித்து, ஆழ்ந்த மதக்கல்வி அளித்து, அரசியல் தெளிவை ஏற்படுத்தி, சித்தாந்த ரீதியில் அவர்களது சிந்தனைப் போக்கைச் செதுக்கிச் செதுக்கிச் சீர் செய்து... அந்த மூன்று பேர் இல்லாது போயிருந்தாலும் ஒருவேளை ஹிஸ்புல்லா தோன்றியிருக்கலாம். ஆனால், இத்தனை சக்திமிக்கப் போராளி இயக்கமாக உருப்பெற்றிருக்கவே முடியாது.

முதல் நபர் அப்பாஸ் அல் மூசாவி. பிப்ரவரி 16, 1992_ம் ஆண்டு ஓர் இஸ்ரேலிய போர் ஹெலிகாப்டரிலிருந்து வீசப்பட்ட குண்டால் கொலை செய்யப்பட்ட ஷேக் அப்பாஸ் அல் மூசாவி, லெபனானின் அதிகார சக்திகளுள் முதன்மையானவர்.

அவர் நாடாளுமன்றத்துக்குப் போனவரில்லை. மாகாணத் தேர்தல்களையெல்லாம் சந்தித்ததில்லை. பெரிய பல்கலைக் கழகப் பேராசிரியரோ, நீதிபதியோ, ராக்கெட் விஞ்ஞானியோ, சிந்தனைச் சிற்பியோ இல்லை. ஒரு முதல்தரப் போராளியா, ஆயுத விற்பன்னரா, ஏகப்பட்ட போர்க்களங்களில் வீரத் தழும்புகள் பல பெற்றவரா, மிகத் தீவிரமான தீவிரவாதியா என்றால் அதுவுமில்லை. தீவிரவாதிகளுள் ஒரு மிதவாதி என்று கருதப்பட்ட அவர், ஒரு சாதாரண வாத்தியார். லெபனானில் உள்ள பேக்கா பள்ளத்தாக்குப் (Bekaa valley) பகுதியில் அல் நபி ஷைத் என்கிற கிராமத்தில் ஓர் எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். அந்த ஊரில் பள்ளிக்கூடம் கூடக் கிடையாது. யாரோ தெரிந்தவர்கள், உறவினர்களின் உதவியின்பேரில் சிறு வயதிலேயே ஈராக்குக்குச் சென்று, அல் நஜஃப் என்கிற நகரில் ஒரு மதரஸா பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்க ஆரம்பித்தார். படிக்கிற வயதில் அவருக்கு அயதுல்லா கொமேனிதான் ஹீரோ.

ஆ, ஒரு விஷயம். ரொம்ப முக்கியம். ஈரானிய முன்னாள் அதிபர் அயதுல்லா கொமேனியைப் பற்றிப் பேசாமல் ஹிஸ்புல்லா பிரபலங்களைப் பற்றிப் பேசவே முடியாது. லெபனானின் நிரந்தர சூப்பர் ஸ்டார் என்றால் அது கொமேனிதான். நமக்கெல்லாம் சல்மான் ருஷ்டிக்கு ஃபத்வா கொடுத்த கிழவர் என்று மட்டும்தான் அவரைப் பற்றித் தெரியும்.

கொமேனியின் நிஜ முகம் வேறு. அந்த முகத்தின் அகத்தின் நகல்களாகத் தாங்கள் இருக்கவேண்டும் என்பதுதான் ஹிஸ்புல்லாக்களின் கனவு, லட்சியம். வேறு வழியில்லை. இப்போதும் மன்னிக்கவும். மூசாவி இன்னும் ஓர் அத்தியாயம் கழித்துத்தான் வருவார். இப்போது கொமேனி.